**வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக

திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனம் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் செலவு பேரேடுகளைப் பேணுதல் பொதுப் பேரேடு கட்டுப்பாடு, பொதுப் பேரேட்டுக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் சமப்படுத்தல் பின்தங்கிய நிலையில் இருந்தன. | நிதியத்தின் செலவுப் பேரேடுகளைப் பேணுதல், பொதுப் பேரேடு கட்டுப்பாடு, பொதுப் பேரேட்டுக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் சமப்படுத்தல் ஆகியவற்றை சரியாக மேற்கொள்ளும் படி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர். | ஏடுகள் மற்றும் பேரேடுக் கணக்குகளை பேணும் போது சரியான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை அறிமுகப் படுத்திக் கொடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அத்திடிய சேகரிப்பு மத்திய நிலையத்திற்கு 2018 சனவரி 01 ஆந் திகதி முதல் 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதான களஞ்சியத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 466,601 பெறுமதியான மருந்து வகைகள் அந்த இடத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், அத்தொகையினை மருந்து தொகை அட்டவணையில் பதியப்பட்டுள்ளாததுடன் அத் தொகையினை பாவனை செய்தமைக்கான சான்று இருக்கவில்லை. | இங்கு குறிப்பிட்டு இருக்கின்றவாறு காலாவதியான மருந்துகளை நாம் பாவனை பண்ணாததுடன் இக்காலாவதியான மருந்துகளை தள்ளுபடி செய்வதற்காக தினமும் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான தொகை கட்டுப்பாட்டிற்கான முறைமையினை பேணிச் செல்ல வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் 757(ஆ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த பொருட் கணிப்பு அறிக்கையின் படி அத்திடிய சேகரிப்பு மத்திய நிலையத்தில் ரூபா 758,154 பெறுமதியிலான தொகை இருந்து இந்ததற்காக கணிப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அக்கணிப்பின் போது தொகை இருப்பு புத்தக மீதியுடன் ஒப்பீடு செய்யப்பட்டு | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் 757(ஆ) பிரகாரம் செயற்படும் படி ஆலோசனை கூறுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணம் 757(ஆ) பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கவில்லை. அதன்படி தொகை இருப்பில் பற்றாக்குறை அல்லது மிகை உள்ளதா என இனங்கண்டு கொள்ளப்படவில்லை. | | |
| (ஈ) | அத்திடிய சேகரிப்பு மத்திய நிலையத்தில் கணக்காய்வு திகதியான 2019 செப்தெம்பர் 17 ஆந் திகதி சத்திர சிகிச்சைக் கூடத்தினுள் ரூபா 283,549 பெறுமதியான மருந்து வகை இருந்ததுடன் தொகை புத்தகத்தின் படி ரூபா 83,035 பெறுமதியானவை இருந்தமையினால் ரூபா 200,514 க்கான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. | இங்கு காட்டப்பட்டு உள்ளவாறு காலாவதியான மருந்து வகை நாம் பாவனை பண்ணாததுடன் அந்த காலாவதியான மருந்துகளை தள்ளுபடி செய்வதற்காக தினமும் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான தொகை கட்டுப்பாட்டிற்கான முறைமையினை பேணிச் செல்லல் வேண்டும். |

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் நியமங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இல் 13 ஆம் பிரிவின் படி சொத்துக்களுக்கான கிரய உபகரண வரிசையினை தொகுக்கும் போது --- உரித்தான அல்லது தற்போதைய சொத்துக்களில் அவற்றின் ஒத்த இயல்பினை அல்லது தொழிற்பாட்டின் ஒத்த தன்மையின் அடிப்படையாகக் கொண்டு நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தும் நோக்குடன் வேறாக தொகுத்துக் காட்டப்பட வேண்டும். ஆயினும் தாபன அமைப்பினை மேம்படுத்தும் முகமாக ரூபா 57,012,696 வேறாக தொகுக்கப்படாது ஏனைய சொத்துக்களாக காட்டப்பட்டு இருந்ததுடன் அலுவலக உபகரணங்களின் கீழ் ரூபா 1,759,142 வெடி கருவிகள் மற்றும் ரூபா 4,477,676 நீச்சல் உபகரணங்களாக காட்டப்பட்டு இருந்தன. | எதிர்காலத்தில் சொத்துக்களை சரியாக வேறாக தொகுத்து பதிவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2 இன் படி காசு மற்றும் காசுக்கு ஒப்பானவை என்பதற்கு 03 மாதத்திற்கு குறைவானவை இறுக்கப்படுவதற்கான திறைசேரி உண்டியல் சேர்க்கப்பட வேண்டினும் 84 நாட்களில் இறுக்கப்படவுள்ள ரூபா 34,466,003 க்கான திறைசேரி உண்டியல் அவ்வாறு காட்டப்படாது இருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக் கமைய செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 வருட நீதிமன்ற பண வருமானம் ரூபா 50,410,500 ஆக இருந்த போதிலும் வருமானமாக ரூபா 85,878,583 காட்டப்பட்டிருந்தது. பிரகாரம் ரூபா 35,468,083 ஆல் நீதிமன்ற தண்டப்பணம் மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | நீதிமன்றம் தண்டப் பணம் அறவிடுவதனை சரியாக கணக்கில் பதிய வேண்டும். |
| (ஆ) | மிருகக் கூடுகளை கணக்கில் பதியும் போது இருமுறை கணக்கில் பதியப்பட்டிருப்பதால் நிரந்தர சொத்து ரூபா 670,320 ஆலும் மற்றும் தேய்மானம் ரூபா 16,895 மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கூடுகளுக்கான ரூபா 670,320 பணத்தினை மற்றும் தேய்மானத்திற்கான அளவினையும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கு வைப்பதற்கு மற்றும் வழிமுறைகளும் பின்பற்ற வேண்டியமை. |
| (இ) | மீளாய்வு ஆண்டு இறுதியில் முடிக்கப்பட்டிருந்த ரூபா 67,212,383 க்கான செய்து கொண்டு போகும் வேலையினை நிரந்தர சொத்தாக கணக்கில் பதியப்பட்டு இருக்கவில்லை. | சரியாக கணக்கு பதியப்படுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத் துறைக் நியமம் மற்றும் எண்ணக்கரு சட்டத்திற்கமைய செயற்பட வேண்டியமை. |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் ரூபா 9,354 மேலதிகமாகவும் முன்னர் கிடைக்கப் பெற்ற பற்றுச்சீட்டு வருமானம் ரூபா 36,980 குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக திறைசேரி உண்டியல் வட்டி வருமானத்தினை கணக்கில் பதியப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | காசு | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| இறுதி இறப்பர் ரவை தொகை | 125,812 | தொகைக்கான உறுதிப் பத்திரங்கள் | தொகைக்கான உறுதிப் பத்திரங்கள் பேணப்பட்டு வருகின்றன. | தொகைக்கான உறுதிப் பத்திரம் பேணப்படுதல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2007 யூன் மாதம் 27 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 2007/01 கொண்ட வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் யானைகள் பாதுகாப்பு சுற்று நிருபம் | அத்திடிய காப்பு மத்திய நிலையத்திற்கு கொண்டு வரப்படும் சகல மிருகங்களினதும் விபரங்கள் மற்றும் அதிலிருந்து விடுவிக்கப்பட்ட தள்ளுபடி செய்யப்பட்ட மற்றும் இறந்து போன மிருகங்களின் விபரங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய இருந்த போதிலும், அப்பத்திரங்கள் தகுந்த முறையில் பராமரிக்கப்பட்டு இருக்கவில்லை. | இந்த மத்திய நிலையம் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களினால் பராமரிக்கப்படுவதால் தினமும் காயத்திற்குள்ளாகி கண்டுபிடிக்கப்படும் மிருகங்களின் விபரங்களை பதிய முடியாது போயிற்று எதிர்காலத்தில் தகுந்த முறையில் பத்திரங்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்று நிருபத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 பிரிவுகள் | கினிஹிரிய உல்லாச பங்களாவினை நிர்மாணிக்கும் போது பெறுகை ஏற்பாட்டு அலுவல்களுக்காக பௌதீக ரீதியான நிச்சயமற்ற நிலவரம் மற்றும் விலை அசைவுகள் தொடர்பான ஒதுக்கீடுகளை உள்ளடக்கப்பட்ட முழுமையான கிரய மதிப்பீட்டினை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டு இருக்கவில்லை. | முழுமையான கிரய மதிப்பீட்டினைக்கான அங்கீகாரத்தை திணைக்கள பெறுகை சபையினால் பெற்றுத் தரப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1995 இலக்கம் 35 கொண்ட அளவுகோல் மற்றும் சேவை அதிகார சட்ட முயற்சிகள் 37 ஆவது பிரிவு | நிறுத்தல் மற்றும் அளத்தில் உபகரணங்களின் பிழையின்மையினை பன்னிரண்டு மாத எல்லைக்குள் பரிசோதகர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டி இருந்த போதிலும், உடவளவ யானைகள் காப்பக மையத்தில் உள்ள பாலம் தராசின் பிழையின்மையை 2019 ஆம் ஆண்டு பரீட்சிக்கப்பட்டு இருக்கவில்லை. | தராசு, யானைகள் காப்பக மையத்திற்கு உணவினை நிறுத்துப் பார்ப்பதற்கு பாவனை செய்யும் போது அமைப்பில் வேறுபாடு தேர்ந்து இல்லாமை வாகன முழுப் பாரத்தினை நிறுத்தலின் போது உறுதியாகி உள்ளமையினால் அதில் மீண்டும் பிழையின்மையினை பார்ப்பது தேவையற்றதாக உறுதியாகிஉள்ளது. ஆகையினால் வருடாந்தம் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படவில்லை. | 1955 இலக்கம் 35 கொண்ட அளவு கோல் நியமம் மற்றும் சேவை அதிகார சட்ட மூலத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 1,282,370,046 க்கான மிகை இருந்ததுடன் அதற்கு இணங்கலாக சென்ற ஆண்டின் மிகை ரூபா 1,871,142,266 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவில் ரூபா 588,772,220 க்கான பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவுக்கு நிதியத்தின் பிரதான வருமானமாக வழியான பூங்கா நுழைவுக் கட்டணம் ரூபா 229,779,584 வாகவும், சேவைக்கட்டணம் ரூபா 29,479,514 வாகவும் மற்றும் பூங்காவிற்கு வாகன நுழைவுக்கட்டணம் 21,865,304 வாகவும் குறைவு அடைந்தமையும் செலவின வழியான பிரயாண செலவு ரூபா 47,121,612 ஆக மற்றும் பொதுமக்களுக்கு மிருகங்களினால் ஏற்படும் பாதிப்புக்கான நஷ்டஈட்டு செலவினம் ரூபா 65,085,112 ஆக அதிகரித்தலும் முக்கிய காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான அலுவலகத்தின் இரண்டாம் தளத்தில் இணைப்புப் பகுதி ஒன்றினை இணைப்பதற்காக ரூபா 6,323,500 க்கான ஒப்பந்தத்திற்கு முற்பணமாக ரூபா 1,264,500 செலுத்தப்பட்டிருந்தது. முற்பணத்தில் ரூபா 529,217 க்கான நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், மீதி ரூபா 735,283 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், இதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்த முற்பண காப்பு நிதியினை விடுவிக்கப்பட்டு இருந்தது. இவ் ஒப்பந்தத்தினை பணிப்பாளர் தலைமை அதிபதியின் 2019 ஒக்தோபர் 31 ஆந் | ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டுள்ள முற்பணத்திற்காக வைக்கப்பட்டுள்ள பிணைக் காப்பு நிதியினை அவரால் மீளப் பெறப்பட்டு உள்ளதுடன் அவரால் மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீட்டு பெறுமதி ரூபா 529,217 உம் அதில் ரூபா 358,929 மேலதிக வேலை பெறுமதியும் உண்டு. அதன் பிரகாரம் முழு வேலைக்கான பெறுமதி ரூபா 888.146 ஆகும். | திணைக் களத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 735,283 க்கான இழப்பினை அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

திகதிய இலக்கம் வஜி/01/08/இங்ஜி/01/03/2007/பீ/04 கொண்டி கடிதம் மூலம் முடிக்கப்பட்டு இருந்த போதிலும், உடன்படிக்கையின் படி செயற்பட்டு இருக்காததன் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடவளவ யானைகள் காப்பகத்தில் நீதிமன்ற உத்தரவின் படி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 13 யானைகளின் தண்ணீர் தேவையினை பூர்த்தி செய்வதன் பொருட்டு ரூபா 628,383 செலவிடப்பட்டு சிறிய நீர் தொட்டியொன்று கட்டப்பட்டு இருந்த போதிலும், அவை திருத்தப்பட்டு இருக்கவில்லை. தின்பண்டங்களின் கழிவுகள் அதனுள் குவிக்கப்பட்டு இருந்தன. | யானைக் கூட்டத்தினுள் இருக்கும் நீர் தொட்டி இதற்கு மூன்று வருடங்களுக்கு முன் 2016 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டதுடன் நிர்மாணப் பணிகள் பிரதான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்ப காலத்தில் தகுந்த முறையில் செயற் படுத்தப்பட்ட போதிலும், குட்டி யானைகளால் செய்யப்பட்ட நாச வேலை காரணமாக திருத்தப்பட வேண்டி உள்ளது. மீண்டும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திட்டங்களை தயாரிப்பதற்கு முன்னர் தேவையினை அடிப்படையாகக் கொண்டு முறையாக கற்றல் வேண்டும். |
| (ஆ) | ஹொரவ்பொத்தான யானைகள் காப்பு மத்திய நிலையத்தில் 2019 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்டயானைகள் கணக்கெடுப்பின் படி தற்போதைய யானைகளின் எண்ணிக்கையான 09 ஆன போதிலும், அது பற்ற கவனம் செலுத்தப்படாது 30 யானைகளுக்காக உணவு வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி 2019 யூலை மாதம் முதல் செப்தெம்பர் 14 வரை 21 மேலதிக மிருகங்களுக்காக ரூபா 3,955,245 க்கான உணவு வழங்கப்பட்டிருந்தது. | ஹொரவ்பொத்தான யானைகள் காப்பு மத்திய நிலையத்தில் 2019 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு சரியான கணக்கெடுப்பாக இருக்கவில்லை. அங்கு தற்போது வைக்கப்பட்டுள்ள யானைகளுக்கு தேவையான உணவு அளவில் 25% மாத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டு இருப்பதனால் மேலதிகமான | மிருகங்கள் தொடர்பாக நிதமும் கண்காணிக்கப்பட வேண்டியதும் மற்றும் அதனை அடிப்படையாக கொண்டு மிருகங்களின் நலனினை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மிருகங்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளதாக கணக்கெடுப்பின் மூலம் முன்வைக்கப்படும் தகவல்களை ஏற்றுக் கொள்ள முடியாது. | |
| (இ) | ஹொரவப்பொத்தானை யானைகள் காப்பக மத்திய நிலையத்தில் இருக்கும் யானைகளுக்கு கலப்பு இலைகுலைமற்றும் பலா இலை வழங்குவதில் உடன்படிக்கை இல்லாது 2018 திசெம்பர் 24 ஆந் திகதி முதல் 2019 மார்ச் 15 ஆந் திகதி வரையிலான கால அளவில் ரூபா 5,024,705 வழங்குநருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஹொரவ்பொத்தான காட்டு யானைகள் காப்பக மத்திய நிலையத்திற்கு உணவு வழங்குவதற்கு டென்டர் பத்திரம் கைச்சாத்து இடப்பட்டது. சனவரி மாதம் கைச்சாத்திடப்பட்டது. சனவரி மாதம் அல்லாமையினால் அவ்வாறு வழங்கப்பட்ட உணவுகளுக்காக வழங்குநருக்கு பணம் செலுத்தப்பட்டது. மேற்படி ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்ட பிறகாகும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் போது கடந்த திகதி இடப்பட்டு கைச்சாத்திட முடியாமையினால் அவ்வாறு கைச்சாத்திட நேர்ந்தமையாயினும் இங்கு அரசுக்கு நிதிசார் இழப்பு நேரவில்லை என்பதனை அறியத் தருகின்றேன். | வழங்குநர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சேவையினை பெற்றுக் கொள்வதற்கு செயற்பட வேண்டும். |
| (ஈ) | உடவளவ சாதுவான யானைகள் காப்பு மத்திய நிலையத்தில் யானைகளுக்காக 2019 ஆம் வருடம் தீனி கொள்வனவு செய்யும் ஒப்பந்தப்படி நாள்தோறும் நிதித் தேவையினை வழங்காது இருந்த சந்தர்ப்பங்களில் நிலுவை வழங்கல்களுக்காக 2019 சனவரி 01 ஆந் திகதி முதல் 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் ரூபா 530,828 க்கான தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | முதலாவதாக குட்டி யானைகளுக்கு ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நடைமுறையில் வழங்கக் கூடியதான ஆகக்கூடிய தீனி தொகையினை பெற்றுக் கொடுப்பது மற்றும் டென்டர் ஒப்பந்தக்காரர்களை உஷார்படுத்திக் கொண்டு இலாபத்தினை மட்டும் நோக்கமாக கொள்ளாது தரம் வாய்ந்த தீனி வகையினை பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் செயற்பட்டதனை தயவுடன் குறிப்பிட விரும்புகின்றேன். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | உடவளவ சாதுவான யானைகள் காப்பு மத்திய நிலையத்தில் யானைகளுக்காக மரக்கறி மற்றும் பழங்கள் நாள்தோறும் சம்பந்தப்பட்ட வழங்குதலை மேற்கொள்ளப்படாமையினால் 2019 சனவரி 01 ஆந் திகதி முதற்கொண்டு 2019 ஆகஸ்ட் 31 வரையிலும் ரூபா 419,238 க்கான தண்டப் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வு விசாரிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கால வீச்சினுள் தாமதக் கட்டணமாக தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தால் அந்த மிருகத் தீனி வழங்குநர்கள் அவ்வாறாவது தீனி வழங்குதலை மேற்கொள்ளாது இருப்பதற்கு வாய்ப்பு இருந்தது. கணக்காய்வு பரீட்சிப்புக்கு முன்னதாக தாமதித்தேனும் கொண்டுவரப்படும். தீனிவகை மிருகங்களின் வயிற்றுப் பசியினை போக்குவதற்கு பெற்றுக் கொள்ளப்பட்டதனை ஏற்றுக் கொள்வதுடன் உண்மையில் அவ்வேளையில் தண்டப்பணம் அறவிடாது இருந்தமைக்குக் காரணம் அவ்வாறு செய்திருந்தால் அத்தீனி வழங்குநர்கள் மிருகத் தீனி பெற்றுத் தருவதனை மேற்கொள்ளாது விடுவர் என்பதனை மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன். | ஒப்பந்தப் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |
| (ஊ) | அத்திடிய காப்பு மையத்தின் மிருகக் கூடுகளை நிர்மாணிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பொறியிலாளரை மதிப்பீட்டின் படி M1 மற்றும் M2 உருப்படி ரூபா 954,800 இனால் மிகை மதிப்பீடாகி இருந்தமை M2 உருப்படியினைக்கு பணம் செலுத்தும் போது ரூபா 101,112 பணம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதனை அதற்கு பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட திட்டப் படத்தில் M1 உருப்படிக்காக சதுரஅடி 10500 ஆக மதிப்பீடு செய்யப்பட்டமை வேலைதள அளப்பின் படி தேவையான அளவுக்கு என்பதுடன் கோப்பில் உள் இருக்கும் திட்டப்படம் தவறுதலாக மாற்றி உட்படுத்துவதற்கு இயலாது போன பழைய திட்டப் படத்திற்கு அமைய அல்லாதமையினையும் M1 குறித்துள்ள | திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மேலதிகமாக செலுத்தப்பட்ட மையயும் அறவிடப் படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அளவினை சரியானது என்பதனையும் அறியத் தருகின்றேன். M2 உருப்படிக்காகவும் உட்டுபடுத்தப்பட்டுள்ள நீள அடி அளவினை, வேலைத்தள அளப்பின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டையே பெறுகைக்கு முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டு அளவு என்பதனையும் அறியத் தருகின்றேன். | |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மூர்க்கத்தனமான யானைகளை கட்டுப்படுத்தி வைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஹொரவப்பொத்தான யானைகள் காப்பு மத்திய நிலையத்தில் 2015 செப்தெம்பர் 04 ஆந் திகதி முதற்கொண்டு 2019 யூன் 25 ஆந் திகதி வரையில் மூர்க்கத்தனமுள்ள 51 யானைகள் வைக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 12 யானைகள் பலவித காரணங்களினால் இறந்து போய் இருந்தன. 2019 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட யானைகளுக்கான கணக்கெடுப்பு அறிக்கையின் படி 9 யானைகள் உள்ளதாக காட்டப்பட்டிருந்தன. 30 யானைகள் தொடர்பான எவ்வித சான்றுகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஹொரவப்பொத்தான யானைகள் காப்பு மத்திய நிலையத்தில் 2015 செப்தெம்பர் 04 ஆந் திகதி முதல் 2019 யூன் 19 ஆந் திகதி வரை மூர்க்க குணமுள்ள 51 யானைகள் வைக்கப்பட்டு இருந்த போதிலும், 12 யானைகளும் பற்பல காரணங்களினால் இறந்து போய் உள்ளன. 2019 யூன் 30 ஆகும் போது 09 யானைகள் மட்டும் உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | மிருகங்கள் தொடர்பாக நிரந்தர கண்காணிப்பு செய்யப்பட வேண்டியமை மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்டு மிருகங்களின் நலனினை மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஆ) உடவளவ யானை இடைதங்கல் காப்பகத்தில்மிக்க தேகாரோக்கியத்துடன் இருக்கும் 12 யானைகள் 06 வயதினை கடந்து இருந்தன. 2007 யூன் 27 ஆந் திகதிய இலக்கம் 2007/1 கொண்ட யானை பாதுகாப்பு சுற்று நிருபத்திற்கு அமைய | புனர்வாழ்வு அளிக்கப்படும் 63 குட்டி யானைகள் இருந்ததுடன் அவற்றுள் பன்னிரண்டு 06 வயதினைக் கடந்த இருந்தன. இம்மிருகங்கள் புனர்வாழ்வு | சுற்று நிருபணப் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

| | |
|---|---|
| மிருகங்கள் நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பின் துரிதமாக காட்டினுள் விடுவிக்கப்பட வேண்டிய போதிலும், மேற்படி 12 யானைகளையும் விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறு விடுவிக்கப்படாமையினால் அரசுக்கு வருடத்திற்கு ரூபா 7,299,257 மேலதிகக் கிரயம் அவைகளின் பராமரிப்புக்காக செலவாகின்றதாகவும் அவதானிக்கப்பட்டது. | அளிக்கப்பட்டு விடுவிக்கப்படும் மிருகங்களான படியினால் அச் சுற்றறிக்கையின் படி விடுவிக்க முடியாது உள்ளன. ஆகையால் இதற்காகவே விசேட விதிமுறையினை அறிமுகப்படுத்தி உள்ளதால் அச்சுற்று நிருபம் மூலம் நீக்கப்பட்டுள்ள விடயங்கள் இம்மிருகங்களுக்கான தொடர்புடையன அன்று. |

**3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அத்திடிய மிருக வைத்திய அலுவலகத்தில் ரூபா 3,380,575 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட குரங்குக் கூடு எவ்வித தேவையோ மதிப்பீடோ இன்றி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்ட முறைக்கு புறம்பாக நிர்மாணிக்கப்பட்ட அது 2020 யூன் வரையில் விளைவற்றிருந்தது. | அத்திடிய மிருக வைத்திய சாலையில் நிர்மாணிக்கப்பட்ட குரங்குக்கூடு தேவைப்பாடு நிமித்தம் மதிப்பீடு செய்து திட்டமிடப்பட்டு செய்யப்பட்டதன் அது திட்டத்திற்கு புறம்பாக செய்யப்பட்டது என கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நிர்மாணிக்கப்பட்ட இக்குரங்குக் கூடு பொதுவாக காயப்பட்ட மிருகங்களை சுகப்படும் வரையில் சுகமாய் தங்க வைக்கக் கூடிய தற்காலிக தங்கல் கூடே ஒழிய நெடுங்காலம் குரங்குகள் தங்க வைத்துக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் நிர்மாணிக்கப்பட்ட கூடு இல்லை. இதனை விளைவற்ற செலவாக காட்டப்பட்டிருந்த போதிலும், அது இவ் இடத்திற்கு மிருகங்களின்பாதுகாப்புக் காக கிடைத்துள்ள மதிப்பு மிகுந்த சொத்தாகும். | துரிதமாக அவ் இடத்தில் உள்ள கழிவுகளை அப்புறப்படுத்தி பாவனைக்கு எடுக்க வேண்டியமை. |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.2 (ப) பிரகாரம் உடவளவ சாதுயானை பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள சாதுவான யானைகளுக்காக 2019 வருடம் தேவைக்கான தீனியினை கொள்வனவு செய்யும் போது ''சகல விலைமனுக்களும் அநியாய மேல் மட்டத்தில் இருந்தமையினால் துண்டு அரிசி தொடர்பான விலைமனுவினை நிராகரிக்க முடிந்த போதிலும், துண்டு அரிசி தொடர்பான டென்டரை சந்தை விலையினை விட சுமார் நூற்றுக்கு 50 கூடுதல் விலைக்கு கொடுக்கப் பட்டு இருந்தது. அரிசிக்காக விலைமனு நிராகரிக்கப்பட்ட D&C Suppliers மனுதாரராலும் ரூபா 32க்கான விலையினை முன்வைக்கப்பட்டு இருந்ததுடன் அவ்வாறு இருக்கும் போது மீண்டும் விலைமனு கோரப்படாது எச்.ஜீ ரேணுகா பண்டார வழங்குநரிடமிருந்து துண்டு அரிசி 1 கிலோகிராம் ரூபா 60 க்கு கொள்வனவு செய்தமையினால் கிட்டத்தட்ட ரூபா 204,400 க்கான இருப்பு நேர்ந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | தேசிய போட்டி விலை கோரலின் கீழ் மனு கோரப்பட்டு தகைமை பெற்று குறைந்த பட்ச / ஒரே விலையினை முன்வைத்த நபருக்காக மிருகங்களை பட்டினி போடுவதற்கு முடியாமையினால் மீள் விலைமனு கோரப்படாது கொள்வனவு செய்யப்பட்டமையினை அறியத் தருகின்றேன். எதிர்காலத்தில் சந்தை விலைக்கு நேரொத்த டென்டர் மனு கூடுதலாகய் இருப்பின் மீண்டும் விலைமனு கோரலுக்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் அரசுக்கு குறைந்த பட்ச இழப்பு ஏற்படும் படியாக பெறுகையினை திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.11 பிரிவின் பிரகாரம் முக்கிய உருப்படிகள் தொடர்பாக விலை மனுதாரர்களினால் குறைந்த பெறுமதியினைக் சமர்ப்பிக்கப்பட்டு இருப்பின் அவ்அபாயத்தினை குறைப்பதன் பொருட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் மேலதிக செயலாற்றுகை காப்பினை பெற்றுக் கொள்ளல் அல்லது சிறிய அளவிலான பகுப்பாய்வினை பெற்றுக் கொள்வதனை மேற்கொள்ளப்பட | இந்த மனுக்களை மதிப்பீடு செய்யும் போது ஒப்பந்தக்காரர் முன் வந்தமையும் திணைக்கள மதிப்பீட்டினை விடவும் ஒப்பந்தக்காரரின் தொகை கூடுதலாக இருந்தமை காரணமாகவும் ''ரேக்கு' பகுப்பாய்வொன்றினை பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

வேண்டும். ஆயினும், P&R Construction (Pvt)Ltd நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட அளவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 07 உருப்படிகளுக்காக செயலாற்றுகை காப்பினை அல்லது சிறிதளவிலான பகுப்பாய்வொன்றினை பெற்றுக்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்பாட்டு திட்டத்தின் படி ரூபா 545,146,000 க்கான ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்த 47 திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 50 க்கும் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் செயற்பாட்டு திட்டத்திற்கு அமைய செயற்படும் படியான சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தினேன். | செயற்பாட்டு திட்டத்தின் படி செயற்பட வேண்டியமை. |